## இந்தியைக் கொண்டாடும் போர்வையில் நாட்டின் ஒருமைப்பாட்டை இழிவுபடுத்தும் ஆளுநர்!

# ‘திராவிடம்’ என்ற சொல்லை நீக்கி தமிழ்த்தாய் வாழ்த்தா? ஆளுநரா? ஆரியரா?

## தமிழ்நாட்டின் உணர்வுகளை தொடர்ந்து அவமதித்து வரும் ஆளுநரை உடனே திரும்பப் பெறவேண்டும்! முதல்வர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தல்!

சென்னை, அக். 20 -

**திராவிடம் என்ற சொல்லை நீக்கி விட்டு தமிழ்த் தாய் வாழ்த்து பாடப்பட்டது குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆளுநருக்கு கடும் கண்டனம் தெரிவித்ததுடன், இந்தியைக் கொண்டுவரும் போர்வையில் நாட்டின் ஒருமைப் பாட்டையும், நம் இன மக்களையும் இழிவுபடுத்துகிறார் எனவும், ஆளுநரா? ஆரியரா? எனவும், தமிழ்நாட்டு மக்களின் உணர்வுகளையும், தமிழ்நாட்டையும் தொடர்ந்து அவமதித்து வரும் ஆளுநரை ஒன்றிய அரசு உடனே திரும்பப் பெற வேண்டும் எனவும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வலியுறுத்தியுள்ளார்.**

சென்னை டி.டி. தமிழ் தொலைக்காட்சியில் நேற்று முன்தினம் நடைபெற்ற விழாவின் போது தமிழ்த் தாய் வாழ்த்தில் அவமதிப்பு ஏற்படுத்தியுள்ளது. சென்னை தொலைக்காட்சி நிலையத்தின் பொன் விழா கொண்டாட்டங்களுடன் இணைந்து ‘இந்தி மாதம்’ நிறைவு நாள் விழா கொண்டாடப்பட்டது. தமிழ்நாடு முழுவதும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. மேலும் இந்த நிகழ்ச்சிக்கு ஆளுநர் ஆர்.என்.ரவியும் அழைக்கப்பட்டிருந்தார்.

இந்த சம்பவத்துக்கு பல்வேறு தரப்பினர் கடும் கண்டனம் தெரிவித்த நிலையில் இந்தி பேசாத மாநிலங்களில் ‘இந்தி மாதம்’ கொண்டாடப்படுவதைத் தவிர்க்க வேண்டும் என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பிரதமர் மோடிக்கு கடிதம் எழுதியிருந்தார்.

இந்நிலையில் சென்னை டிடி தமிழ் டிவியில் நேற்று முன்தினம் நடைபெற்ற இந்த விழாவில் ஆர்.என்.ரவியும் கலந்து கொண்டார். தமிழ்த் தாய் வாழ்த்தில், “தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநல் திருநாடும்” என்ற வரியை தவிர்த்து விட்டு பாடப்பட்டது.





ஆளுநர் ஆர்.என்.ரவி பங்கேற்ற விழாவில் தமிழ்த்தாய் வாழ்த்து பாடப்பட்டபோது “திராவிடநல் திருநாடு என்ற வாசகம் தவிர்க்கப்பட்டுள்ளது.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் கண்டனம்!

இச்செய்தியறிந்ததும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடும் கண்டனம் தெரிவித்து சமூக வலைதளப் பதிவில் பதிவு செய்துள்ளார்.

இதுகுறித்து முதல்வர் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு :-

**“ஆளுநரா? ஆரியரா?”**

**திராவிடம் என்ற சொல்லை நீக்கி, தமிழ்த்தாய் வாழ்த்தைப் பாடுவது தமிழ்நாட்டின் சட்டத்தை மீறுவதாகும்!**

**சட்டப்படி நடக்காமல், இஷ்டப்படி நடப்பவர் அந்தப் பதவி வகிக்கவே தகுதியற்றவர்.**

**இந்தியைக் கொண்டாடும் போர்வையில் நாட்டின் ஒருமைப்பாட்டையும் இந்த மண்ணில் வாழும் பல்வேறு இன மக்களையும் இழிவு படுத்துகிறார் ஆளுநர்!**

**திராவிட ஒவ்வாமையால் அவதிப்படும் ஆளுநர் அவர்கள், தேசிய கீதத்தில் வரும் திராவிடத்தையும் விட்டுவிட்டுப் பாடச் சொல்வாரா?**

**தமிழ்நாட்டையும் – தமிழ்நாட்டு மக்களின் உணர்வுகளையும் வேண்டுமென்றே தொடர்ந்து அவமதித்து வரும் ஆளுநரை ஒன்றிய அரசு உடனடியாகத் திரும்ப பெறவேண்டும்!’’**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

**ஆளுநருக்கு முதல்வர் கேள்விகள்?**

4– ஆம் பக்கம்


## தமிழ்த்தாய் வாழ்த்தை அவமதிப்பதா?

# ஆளுநருக்கு கட்சித் தலைவர்கள் கடும் கண்டனம்!









சென்னை, அக். 20-

தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.ரவி பங்கேற்ற சென்னை தொலைக்காட்சி விழாவில் தமிழ்த் தாய் வாழ்த்து பாடப்பட்டபோது “திராவிடநல் திருநாடு” என்ற வரிகள் நீக்கப்பட்டு பாடப்பட்டது. இச்செயலுக்கு பல்வேறு கட்சித் தலைவர்கள் கடும் கண்டனம் தெரிவிக்கையில் இந்திய ஒருமைப்பாட்டுக்கு வேட்டு வைக்கும் ஆளுநர் ஆர்.என்.ரவி என்று கண்டனம் தெரிவித்ததுடன், உடனடியாக ஆளுநர் ஆர்.என்.ரவியை திரும்பப் பெற வேண்டும் என தங்கள் கண்டன அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து கட்சித் தலைவர்கள் வெளியிட்டுள்ள கண்டன அறிக்கை வருமாறு :-

### திராவிடர் கழகம் கி.வீரமணி!

-திராவிடர் கழகத் தலைவர் கி. வீரமணி கண்டன அறிக்கை வருமாறு:

ஒன்றிய பாஜக அரசின் இந்தி, சமஸ்கிருதத் திணிப்பு முயற்சிகள் அரசியலமைப்புச் சட்டத்தையும், மாநில உரிமையையும், மொழி உரிமையையும் மதிக்காமல் தொடர்ந்து மோசமான திசையில் சென்று கொண்டிருக்கின்றன.

சென்னையில் இயங்கி வந்த பொதிகை தொலைக்காட்சியின் பெயரை டிடி தமிழ் என்று மாற்றி அதற்கு காவி வண்ணத்தையும் பூசி தமிழை அழித்தார்கள்.

இன்றைக்கு இந்தி விழாவை சென்னை தொலைக்காட்சி நிறுவன அலுவலகத்தில் கொண்டாடி இருக்கிறார்கள். கடும் எதிர்ப்புகள் அதற்கு எழுந்த சூழலிலும், தமிழ்நாட்டின் ஆளுநராக பாஜக அரசால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள ஆர்.என்.ரவி அந்நிகழ்ச்சியில் பங்கேற்று இருக்கிறார்.

தமிழ்நாட்டிலும், இந்தி பேசாத மாநிலங்களிலும் இந்தியைத் திணிப்பதற்கு எடுக்கப்படும் முயற்சியான “இந்தி விழா”வின் நோக்கமே கண்டனத்திற்கு உரியதாகும். இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் எட்டாவது அட்டவணையில் ஏற்கப்பட்டுள்ள 22 மொழிகளில் தேசிய மொழி என்று எதுவும் குறிக்கப் படவில்லை. அலுவல் மொழி என்று இந்தியும், ஆங்கிலமும் தனி சட்டத்தின் (1963) வாயிலாக குறிப்பிடப்பட்டுள் ளன. அதன் அடிப்படையில் உருவாக்கப்பட்ட The Official Languages Rules, 1976இன் படி ஹிந்தி அலுவல் மொழி என்பதில் தமிழ்நாட்டுக்கு மட்டும் விலக்கு உண்டு.

இந்நிலையில் ஆளுநர் ஆர்.என். ரவி உள்ளிட்டோர் பங்கேற்ற நிகழ்வில் தமிழ்த் தாய் வாழ்த்துப் பாடலில் “தெக்கணமும் அதிற் சிறந்த திராவிடநல் திருநாடும்” என்ற வரிகள் நீக்கப்பட்டு பாடப்பட்டுள்ளது கடுமையான கண்டனத்திற்குரியது மட்டுமல்ல, சட்டப்படியாக உடனடி நடவடிக்கை எடுக்கப் பட வேண்டியதும் ஆகும்.

“திராவிடம் என்று சொல்லை நீக்கி தமிழ்த்தாய் வாழ்த்து பாடும் அளவிற்கு திராவிட ஒவ்வாமை ஆளுநருக்கு ஏற்பட்டிருக்கிறது” என்று தமிழ்நாட்டின் முதலமைச்சர் மிகச் சரியாகக் குறிப்பிட்டுக் கண்டித்திருக்கிறார்.

தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடல் என்றாலும் திராவிடம் என்றாலும் அவர்களுக்கு எட்டிக் காயாக கசக்கிறது. இதற்கு முன்பே சென்னையில் முன்னாள் ஆளுநர் கலந்து கொண்ட ஒரு புத்தக வெளியீட்டு விழாவில் தமிழ்த்தாய் வாழ்த்துக்கு எழுந்து நிற்க மறுத்து காஞ்சி சங்கராச்சாரியார் அடாவடி செய்தார். மற்றொருமுறை ஒன்றிய பா.ஜ.க. அரசின் அமைச்சர் கலந்துகொண்ட நிகழ்வு ஒன்றில் தமிழ்த்தாய் வாழ்த்து முற்றிலும் புறக்கணிக்கப்பட்டது.

இப்போது அது தமிழ்த்தாய் வாழ்த்து மட்டுமல்ல, 2021 டிசம்பர் 17 அன்று வெளியிடப்பட்ட அரசாணையின்படி தமிழ்நாட்டின் மாநிலப் பாடலும் ஆகும். தமிழ்நாட்டின் மாநிலப் பாடலை அவமதிக்கும் வகையில் தமிழ்நாட்டு அரசின் சட்டத்தை மீறும் வகையில் ஆளுநர் செயல்பட்டிருக்கிறார்.

தமிழ்நாட்டின் ஆளுநர் பொறுப்பில் நிறுத்தி வைக்கப்பட்டு இருப்பவர் தமிழ்நாட்டின் சட்டத்தை மீறுவதும் அவமதிப்பதும் எவராலும் ஏற்றுக் கொள்ள முடியாததாகும்.

இந்தியைத் திணிக்கும் ஆர்.எஸ்.எஸ்.சின் ஊதுகுழலாகச் செயல்படும் தூர்தர்ஷன் தொலைக்காட்சியைப் புறக்கணிக்கு மாறு தமிழர்களைக் கேட்டுக் கொள்கிறோம்.

ஒன்றிய அரசின் இந்தி திணிப்பையும், தமிழ்நாட்டின் மாநில பாடலை அவமதிக்கும் ஆளுநரின் செயலையும் கண்டித்து, தமிழ் உணர்வாளர்கள், இளைஞர்கள், மாணவர்கள், திராவிட இயக்கத்தவர், அனைத்துக் கட்சியினர் அனைவரையும் ஒருங்கிணைத்து உரிய வகையில் நமது எதிர்ப்பை வெளிப்படுத்துவோம்!

இவ்வாறு திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி கண்டன அறிக்கையில் தெரிவித்தள்ளார்.

### காங்கிரஸ் கு.செல்வப்பெருந்தகை!

காங்கிரஸ் கட்சியின் தமிழ்நாட்டுத் தலைவர் கு.செல்வப் பெருந்தகை விடுத்துள்ள கண்டன அறிக்கை வருமாறு :-

தமிழக ஆளுநராக ஆர்.என். ரவி பொறுப்பேற்றது முதற்கொண்டு, தமிழ் நாட்டிற்கு விரோதமாகவும், தமிழர்களின் கலாச்சாரம், பண்பாட்டிற்கு எதிராகவும், தமிழ் மொழியின் முக்கியத்துவத்தை குலைக்கின்ற வகையில் தொடர்ந்து பேசி வருகிறார். அரசமைப்புச் சட்டத்தின் முகப்புரையில் கூறப்பட்ட மதச்சார்பின்மையே வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டது என்று ஆணவத்தோடு கூறியிருக்கிறார். இதன்மூலம், எந்த அரசமைப்புச் சட்டத்தின் மீது பதவிப் பிரமாணம் எடுத்துக் கொண்டாரோ, அதற்கு எதிராகவே ஆளுநர் செயல்பட்டு வருகிறார். இதுகுறித்து கடுமையான கண்டனங்களை அனைத்து அரசியல் கட்சிகள் வெளிப்படுத்தினாலும், தொடர்ந்து திட்டமிட்டு தமிழக மக்களின் உணர்வுகளை புண்படுத்துகிற வகையில் பேசி வருகிறார்.

தொடர்ச்சி 4– ஆம் பக்கம்

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை!... முதல் பக்கத் தொடர்ச்சி

போதைப் பொருட்களை ஒழிக்க, ஒன்றிணைந்த முயற்சிகள் தேவைப்படுகிறது என்பதால்தான், நாம் எல்லாம் இன்றைக்கு ஒன்று கூடியிருக்கிறோம். குற்றவாளிகளை கைது செய்வதற்கும், விசாரணை மேற்கொள்ளவும் உங்கள் மாநிலத்திற்கு வருகை தரும் தமிழ்நாடு காவல்துறையினருக்கு உங்கள் ஒத்துழைப்பு மிகவும் தேவை. அதை வழங்குமாறு நான் கேட்டுக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

குறிப்பாக, தடை செய்யப்பட்ட புகையிலைப் பொருட்கள் தமிழ்நாட்டிற்குள் வருவதைத் தடுக்க, தமிழ்நாடு காவல்துறையினரும், அண்டை மாநில காவல்துறையினரும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

சமீபத்தில், கேரள காவல்துறையினர் கொடுத்த தகவலை வைத்து, நாமக்கல் மாவட்டத்தில், ஏ.டி.எம். பணத்தை கொள்ளையடிக்கும் கொடுங்கும்பலை தமிழ்நாடு காவல்துறையினர் வெற்றிகரமாகக் கைது செய்தார்கள். இந்தக் குற்றவாளிகள் கேரளாவில் வெவ்வேறு இடங்களில் ஏ.டி.எம் கொள்ளைச் சம்பவத்தை நடத்திக்கொண்டு, திருச்சூரில் இருந்து தப்பித்திருக்கிறார்கள். இந்தக் கும்பல் பல்வேறு மாநிலங்களிலும் இது போன்ற குற்றங்களில் ஈடுபட்டது விசாரணையில் தெரியவந்தது. தமிழ்நாடு காவல்துறை உடனடியாக சம்பந்தப்பட்ட மாநிலங்களை உஷார்படுத்தியது.

### அனைவருக்குள்ளும் ஒருங்கிணைப்புகளை முன்னெடுப்போம்!

இந்தப் பாராட்டுக்குரிய பணியை இணைந்து நிறைவேற்றிய தமிழ்நாடு மற்றும் கேரள காவல்துறையினரை நான் இந்த நேரத்தில் வாழ்த்துகிறேன். இது போன்ற ஒருங்கிணைப்புகளை நாம் அனைவருக்குள்ளும் முன்னெடுப்பதுதான் இது போன்ற கூட்டங்களின் நோக்கம்!

அண்மையில், பிற மாநிலங்களில் இருந்து கடத்தி வரப்படும் எரிசாராயத்தை வைத்து, சட்டவிரோதமாக போலி மதுபானம் தயாரிக்கும் ஆலையை தமிழ்நாடு காவல்துறையினர் கண்டுபிடித்தார்கள். இந்தச் சட்டவிரோத எரிசாராயக் கும்பல்கள் பெரும் அச்சுறுத்தல்களை ஏற்படுத்துகிறது. இத்தகைய தீங்கு விளைவிக்கும் பொருட்கள் மாநிலத்துக்குள்ளே நுழைவதைத் தடுக்க, மாநில எல்லைகளில் கடுமையான சோதனைகளை மேற்கொள்ளவேண்டியது அவசரத் தேவையாக இருக்கிறது.

### புகார்கள் மீது உடனுக்குடன் நடவடிக்கை எடுப்பதில் தமிழ்நாடு முதன்மை மாநிலம்!

ANPR (தானியங்கி வாகன எண் கண்டறியும்) கேமராக்கள், அதிநவீன ஸ்கேனர்கள் போன்ற நவீன தொழில்நுட்பங்களை எல்லையில் உள்ள சோதனைச் சாவடிகளில் பயன்படுத்துவது மூலம், தடைசெய்யப்பட்ட பொருட்கள், ஏற்கெனவே, குற்றச் சம்பவங்களில் ஈடுபட்ட வாகனங்கள் மற்றும் குற்றவாளிகளைக் கண்டறியும் திறனை நாம் மேம்படுத்த இயலும்.

இணையவழிக் குற்றம் என்பது எந்தவித எல்லையும் இல்லாமல், சட்டத்தில் உள்ள ஓட்டைகளைப் பயன்படுத்தி, பெருகிவரக்கூடிய மிகவும் சிக்கலான ஒரு பிரச்சினை. புகார்கள் மீது உடனுக்குடன் நடவடிக்கை எடுப்பதில் நாட்டிலேயே தமிழ்நாடு இன்றைக்கு சிறப்பான வகையில் முதன்மை மாநிலமாக விளங்கிக் கொண்டிருக்கிறது.

பெரும்பாலும், இணையவழிக் குற்றவாளிகளைப் பிடிக்க ஒரு மாநிலத்தின் காவல்துறை மற்றொரு மாநிலத்துக்குச் செல்லவேண்டிய நிலையில், அவர்கள் பல தடைகளை எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது. ஆகவே, இணையவழிக் குற்றங்களைத் தடுப்பதிலும் நாம் இணைந்து செயல்படவேண்டிய சூழ்நிலையில் இருக்கிறோம்.

2023ஆம் ஆண்டில் மட்டும், 1,390 வழக்குகளில் தொடர்புடைய குற்றவாளிகள் பிற மாநிலங்களைச் சேர்ந்தவர்கள் என்பதும், பலர் தமிழ்நாட்டுக்கு வெளியில் கைது செய்யப்பட்டிருப்பதும் நமக்குள்ளே ஒருங்கிணைந்து செயல்படவேண்டியதன் அவசியத்தை உணர்த்துகிறது. படித்து முடித்துவிட்டு, வெளிநாட்டில் வேலை தேடும் இளைஞர்களைக் குறிவைத்து, அவர்களை அடிமைகளாக, கணினிசார் குற்றங்களில் ஈடுபடுத்தும் Cyber Slavery பிரச்சினை தற்போது பெரிய அளவில் உருவெடுத்திருக்கிறது. சில தென்கிழக்கு நாடுகளை அடிப்படையாக வைத்துச் செயல்படும் குற்றவாளிகளின் பிடியில் சிக்கி, நம்முடைய இளைஞர்கள் பலர் மனரீதியாவும், உடல்ரீதியாவும் துன்பத்திற்கு ஆளாகியிருக்கிறார்கள். இதுபோன்று வளர்ந்துவரும் அச்சுறுத்தல்களைப் போக்குவதற்கு நமக்குள்ளே இருக்கின்ற ஒருங்கிணைப்பை பலப்படுத்தவேண்டும்.

தீவிரவாதம் மற்றும் பயங்கரவாதத்தைக் கையாளுதல் உள்ளிட்ட உள்நாட்டுப் பாதுகாப்பின் முக்கியக்கூறுகள் குறித்து விவாதிக்க, இந்த மன்றம் வழிவகுக்கிறது. எந்தவித தீவிரவாதம் மற்றும் பயங்கரவாதமாக இருந்தாலும், அவற்றைக் கட்டுப்படுத்தி தடுக்க, முழு ஒத்துழைப்பையும், ஒருங்கிணைப்பையும் பலப்படுத்துமாறு இங்கே கூடியிருக்கின்ற மூத்த காவல்துறை அதிகாரிகளை நான் வலியுறுத்துகிறேன்.

### வலைதளங்களில் வதந்தி - முளையிலேயே கிள்ளி எறிந்தோம்!

இன்றைக்கு சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவதற்கு சமூகவலைதளங்களில் பரப்பப்படும் வதந்திகள் பெரும் பிரச்சினையாக இருந்து கொண்டிருக்கிறது. அவற்றின் மூலம் பொது அமைதிக்கு பங்கம் விளைவிக்கும் செயல்களை நாம் பார்க்க முடிகிறது. ஏன், தமிழ்நாட்டிலேயே அப்படியொரு முயற்சியை மேற்கொண்டு பொது அமைதியைச் சீர்குலைக்க முயன்றதை முளையிலேயே கிள்ளி எறியும் வகையில் தீவிர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

பல மாநிலங்களில் இருந்து வதந்தி பரப்பியவர்களை தேடிக் கண்டுபிடித்து, அவர்களை தேசிய பாதுகாப்புச் சட்டத்தில் கைது செய்வது உள்ளிட்ட கடும் நடவடிக்கைகளை தமிழ்நாடு அரசு எடுத்தது என்பதை நீங்கள் அனைவரும் கேள்விப்பட்டிருப்பீர்கள்.

உச்சநீதிமன்ற தலைமைநீதிபதி அவர்களே, “தமிழ்நாடு அமைதியான மாநிலம். அங்கே அமைதியின்மையை உருவாக்க ஏதாவது பரப்புவீர்களா? என்று யூடியூபர் ஒருவரது வழக்கில் சமூகவலைதளங்களின் பாதிப்பு பற்றி கடுமையாகச் சாடியதை இந்தநேரத்தில் நான் குறிப்பிட விரும்புகிறேன். ஆகவே, சமூக வலைதளங்களில் வரும் வதந்திகள் பற்றியும் நாம் மிகுந்த கண்காணிப்புடன் இருந்து ஒருங்கிணைந்து செயல்பட்டு நம் மாநில மக்களின் பாதுகாப்பை உறுதி செய்திட வேண்டும். அதற்கான ஆலோசனைகளையும் இங்கே பகிர்ந்து கொள்ளுங்கள் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

### அனைவரின் பாதுகாப்பையும் உறுதி செய்ய - ஒருங்கிணைந்து செயலாற்றுவோம்!

இந்த மாநாட்டை முன்னின்று நடத்தும் தமிழ்நாடு காவல்துறையானது, அனைத்துத் தளங்களிலும் சட்ட அமலாக்கத்திற்கு, குறிப்பாக போதைப் பொருட்கள், தடைசெய்யப்பட்ட புகையிலைப் பொருட்கள், மாநிலங்களுக்கிடையே செயல்படும் குற்றவாளிக் கும்பல்கள் மற்றும் கணினிசார் குற்றங்கள், சமூக வலைதள வதந்திகள் ஆகியவற்றின் மீதான தீவிர சட்ட நடவடிக்கைக்கு மாநிலங்களுக்கு இடையேயான ஒத்துழைப்பை உறுதிப்படுத்துகின்ற வகையில், மற்ற மாநிலங்களுடன் ஒருங்கிணைந்து செயல்படும் பொறுப்பை ஏற்றிருக்கிறது. அத்தகைய பலமான ஒருங்கிணைப்பு மற்றும் தகவல் பரிமாற்றம் மூலம் எத்தகைய சட்டம் ஒழுங்கு, பொது அமைதி, உள்நாட்டுப் பாதுகாப்பு உள்ளிட்ட அனைத்தையும் சமாளித்து, நம் குடிமக்கள் அனைவரின் பாதுகாப்பையும் உறுதிசெய்ய நாம் கடமையாற்றுவோம்! ஒருங்கிணைந்து செயலாற்றுவோம்!!

### குடிமக்களின் பாதுகாப்பு - நலன்களைக் காத்திடுவோம்!

போதைப்பொருட்களாக இருந்தாலும், குற்றங்களாக இருந்தாலும், இணையவழிக் குற்றங்களாக இருந்தாலும், அதைத் தடுக்க நம்முடைய ஒருங்கிணைந்த முயற்சிதான் தேவைப்படுகிறது. இவ்வாறு நாம் சேர்ந்து பணியாற்றுவதன் மூலம், நம்முடைய குடிமக்களின் பாதுகாப்பு மற்றும் நலன்களைக் காப்பதோடு, அனைவருக்கும் ஒரு பாதுகாப்பான எதிர்காலத்தையும், நம் மாநிலங்களின் முன்னேற்றத்தையும் உறுதி செய்யலாம் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நிகழ்ச்சியில் நானும் கலந்து கொண்டு என்னுடைய கருத்துக்களை எடுத்துச் சொல்லக்கூடிய ஒரு வாய்ப்பைத் தந்திருக்கக்கூடிய அனைவருக்கும் நான் மீண்டும் ஒருமுறை என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.